04 MAY 1995

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தவறாளர்களை இடமாற்றுதல் சட்டம்

*(1995, பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1995, பெப்புருவரி மாதம் 17 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 90* *தபாற் செலவு : ரூபா 2.00*

**1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தவறாளர்களை இடமாற்றுதல் சட்டம்.**

*[1995, பெப்புருவரி மாதம் 13 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

ச. வ. —ஓ. 17/92
4098

இலங்கையில் தவறொன்றுக்காகக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் பிரசையொருவரை அத்தகைய நாட்டிற்கு இடமாற்றிவிட ஏற்பாடு செய்வதற்கும், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றில் தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட இலங்கைப் பிரசை எவரையும் இலங்கைக்கு இடமாற்றிவிடுவதற்கும் அத்துடன் அதனோடு தொடர்புடைய அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1995 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தவறாளர்களை இடமாற்றுதல் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**சட்டத்தின் ஏற்புடைமை.**

2. இலங்கைக்கும் வேறு ஏதேனும் நாட்டிற்குமிடையே இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னராயினுஞ்சரி, பின்னராயினுஞ்சரி, உடன்படிக்கையொன்று செய்துகொள்ளப்பட்டுள்ளவிடத்து, அமைச்சர் கசெத்தில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம், (இச்சட்டத்தில் "குறித்துரைக்கப்பட்ட நாடு" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வேறு நாடு தொடர்பில் இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையனவாதல் வேண்டுமென வெளிப்படுத்தலாம்.

**அமைச்சர் தவறாளரொருவரை இடமாற்றுவதற்குக் கோரும் விண்ணப்பமொன்றினைச் செய்தல்.**

3. (1) அமைச்சர், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் பிரசையொருவராயிருப்பவரான அல்லது பிரசையொருவராகயிருப்பவராகச் சந்தேகிக்கப்பட்ட எவரேனும் தவறாளரை அந்நாட்டிற்கு இடமாற்றும்படி கோரி அந்நாட்டின் தோதான அதிகாரிக்கு விண்ணப்பமொன்றினைச் செய்யலாம்.

(2) ஒராம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் பிரசையொருவராயிருப்பவராக உரிமை கோரும் தவறாளர் எவரும், அவர் குறித்துரைக்கப்பட்ட எந்த நாட்டின் பிரசையொருவராயிருப்பவராக உரிமை கோருகின்றாரோ அந்த நாட்டிற்கு இடமாற்றப்படுவதற்கு மறியற்சாலைகள் ஆணையாளர் ஊடாக அமைச்சருக்கு விண்ணப்பமொன்று செய்யலாம் என்பதுடன், அமைச்சர், தோதானதென அவர் கருதுமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் அத்தகைய தவறாளர் சார்பில் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரிக்கு வேண்டுகோள் ஒன்றை விடுக்கலாம்.

(3) இப்பிரிவின்கீழ் வேண்டுகோளுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்தில் செய்யப்படுதலும் அத்துடன் அத்தகைய ஆவணங்களுடன் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(4) அமைச்சர், எவரேனும் தவறாளரின் வேண்டுகோளின்பேரில் (2) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றைச் செய்யுமிடத்து இடமாற்றமொன்றுக்கு அத்தகைய தவறாளரின் வேண்டுகோள் தொடர்பில் அமைச்சராலும் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியினாலும் எடுக்கப்பட்ட நடவடிக்கையை அல்லது முடிவைப் பற்றி அத்தகைய தவறாளருக்கு அவர் எழுத்தில் அறிவித்தல் வேண்டும்.

குறித்துரைக்கப்பட்ட நாடொன்றினால் செய்யப்பட வேண்டிய விண்ணப்பம்.

4. (1) இலங்கைப் பிரசையொருவரென உரிமைகோரும் தவறாளரொருவரை இலங்கைக்கு இடமாற்றுவதற்குக் குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியொருவரால் அமைச்சருக்குச் செய்யப்படும் விண்ணப்பம் எதுவும்—

(அ) அத்தகைய விண்ணப்பம் அந்நோக்கத்திற்கென விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் செய்யப்பட்டிருந்தாலன்றியும்; அத்துடன்

(ஆ) அத்தகைய தவறாளர், விடயத்திற்கேற்ப கட்டளையால், முடியால் அல்லது தீர்ப்பால் மறியற்றண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்தக் கட்டளையின், முடியின் அல்லது தீர்ப்பின் பிரதியொன்று சரியானதென அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியால் சான்றுப்படுத்தப்பட்டு விண்ணப்பத்துடன் இணைக்கப்பட்டிருந்தாலன்றியும்,

அமைச்சரால் ஏற்றுக் கவனிக்கப்படுதலாகாது.

(2) அமைச்சர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றை கட்டளையின்மூலம் அனுமதிக்குமிடத்து, (1) ஆம் உட்பிரிவின்கீழ் விண்ணப்பமொன்றுடன் இணைக்கப்பட்ட விடயத்துக்கேற்ப கட்டளை, முடிபு அல்லது தீர்ப்பு, அதன்கண் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்கான எண்பிப்பாதல் வேண்டும் என்பதுடன், அது இலங்கையில் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் கொண்ட நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்ட விடயத்திற்கேற்ப ஒரு கட்டளை, முடிபு அல்லது தீர்ப்பு ஒன்று என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும்.

இடமாற்ற நிபந்தனை.

5. இச்சட்டத்தின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது தவறாளர் ஒருவரின் இடமாற்றமானது, பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைந்ததாக இருத்தல் வேண்டும் :—

(அ) தவறாளரானவர், வேறேதேனும் நாட்டின் பிரசை ஒருவராக இருக்கலாம் என்பது எவ்வாறிருப்பினும், அவர் இலங்கையின் அல்லது குறித்துரைக்கப்பட்ட நாட்டின் ஒரு பிரசையாக இருத்தல் ;

(ஆ) விடயத்துக்கேற்றாற்போன்று எந்தக் கட்டளை, முடிபு அல்லது தீர்ப்பின்மூலம் தவறாளர் மீது மறியற்றண்டனைத் தீர்ப்பு விதிக்கப்பட்டதோ அந்தக் கட்டளை, முடிபு அல்லது தீர்ப்பு இறுதியானதாதல் ;

(இ) இடமாற்றத்திற்கான விண்ணப்பம் செய்யப்பட்ட நேரத்தில், சம்பந்தப்பட்ட தவறாளர், அவர் மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலத்தில் ஆறு மாதங்களுக்கு அதிகமான காலத்தை அனுபவிக்கவேண்டியவராகவிருத்தல் அல்லது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைக் காலமானது, குறித்துரைக்கப்படாதவொரு காலப்பகுதியாகவிருத்தல் ;

(ஈ) தவறாளர், இடமாற்றத்திற்குச் சம்மதம் அளித்துள்ளவராயிருத்தல் அல்லது தவறாளரின் வயது அல்லது உடல் அல்லது உள நிலைமையைக் கருதி அவர் தனது சம்மதத்தைக் கொடுக்க இயலாதவராக இருந்தால், சம்மதமானது ஒன்றில் அமைச்சரால் அல்லது தவறாளரின் சார்பில் சம்மதம் அளிப்பதற்குத் தகுதிவாய்ந்தவரென குறித்துரைக்கப்பட்ட நாடொன்றின் தோதான அதிகாரியினால் பெயர் குறிப்பிடப்பட்டவரான வேறெவரேனும் ஆளினால் அளிக்கப்பட்டிருத்தல் ;

(உ) அமைச்சரும் குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியும் இடமாற்றத்திற்குச் சம்மதம் அளித்திருத்தல்.

6. (1) அமைச்சரானவர், தோதானதென அவர் கருதுகின்றவிடத்தும், அத்துடன் (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாகவும், தவறாளர் எவரையும், குறித்துரைக்கப்பட்ட நாடொன்றுக்கு இடமாற்றம் செய்கின்றதை அதிகாரமளிக்கும் ஆணைப்பத்திரமொன்றினை வழங்கலாம். அமைச்சரால் ஆணைப்பத்திரமொன்று வழங்கப்படுதல்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட வேண்டியதான ஆணைப்பத்திரம் அமைச்சரின் கைப்பட்டதான விதித்துரைக்கப்பட்ட படிவத்திலிருத்தல் வேண்டும்.

(3) அமைச்சரானவர், அத்தகைய தவறாளர் தொடர்பாக, அவரது சொந்த மொழியில் அத்தகைய இடமாற்றத்தின் பயன், அதன் விளைவுகள் என்பனபற்றி எழுத்தில் இடமாற்றம் செய்யப்படுகின்ற தவறாளருக்கு அறிவிப்பதற்கான நியாயமான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளனவெனத் திருப்திப்பட்டாலன்றி, அவர் (1) ஆம் உட்பிரிவின் கீழான ஆணைப்பத்திரமொன்றை வழங்குதலாகாது.

(4) அமைச்சரானவர், (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆணைப்பத்திரமொன்றை வழங்கும் திகதியன்று அதன் பிரதியொன்றை மறியற்சாலைகள் ஆணையாளருக்குச் சேர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

(5) ஓராம் உட்பிரிவின்கீழ் வழங்கப்பட்ட ஆணைப்பத்திரமொன்று, அத்தகைய தவறாளரை ஏற்றுக்கொள்வதற்கும் அத்துடன் அவரைக் கட்டுக்காப்பில் வைத்திருந்து அத்தகைய தவறாளரின் கட்டுக்காப்பை எடுப்பதற்கென குறித்துரைக்கப்பட்ட நாட்டின் தோதான அதிகாரியினால் முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் கட்டுக்காப்புக்குள் கையளிப்பதற்கும் அதிகாரமளிக்கப்பட்டவரான ஆளெவருக்கும் அத்தகைய தவறாளரை மறியற்சாலைகள் ஆணையாளர் ஒப்படைப்பதற்கு அல்லது ஒப்படைக்கச் செய்வதற்குப் போதுமான அதிகாரம் எனக் கருதப்படுதல் வேண்டும்.

ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டபின் சம்மதத்தை மீளப்பெற முடியாது.

7. ஆறாம் பிரிவின்கீழ் ஆணைப்பத்திரம் வழங்கப்பட்ட திகதியன்றும் அதன்பின்னரும், எந்தத் தவறாளர், தொடர்பில் அத்தகைய ஆணைப்பத்திரம் வழங்கப்பட்டதோ அந்தத் தவறாளரினால் 5 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியின்கீழ் அளிக்கப்பட்ட சம்மதம் மீளப்பெற முடியுமானதாதலாகாது என்பதுடன், அதற்கிணங்க ஆணைப்பத்திரம் வழங்கப்பட்ட பின்னர் அளிக்கப்பட்ட சம்மதமொன்றின் கருதப்பட்டதான மீளப்பெறுகை எதுவும் அத்தகைய ஆணைப்பத்திரத்தின் வலிதுடைமையையோ அல்லது அத்தகைய ஆணைப்பத்திரம் தொடர்பாக விடுக்கப்பட்ட எவையேனும் பணிப்புக்களையோ பாதித்தலுமாகாது.

இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட தவறாளர் ஒருவரை மறியற்சாலைகள் ஆணையாளர் கட்டுக்காப்பில் வைத்திருத்தல்.

8. (1) நான்காம் பிரிவின்கீழான கட்டளை ஒன்றின்மீது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டிலிருந்து இலங்கைக்கு இடமாற்றஞ் செய்யப்படும் தவறாளர் ஒவ்வொருவரும், மறியற்சாலைகள் ஆணையாளருக்கு விதிமுறையாக ஒப்படைக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், மறியற்சாலைகள் ஆணையாளர், அத்தண்டனைத் தீர்ப்பானது இலங்கையிலுள்ள நீதிமன்றமொன்றினால் விதிக்கப்பட்டிருந்தாற்போன்று அத்தண்டனைத் தீர்ப்புக் காலப்பகுதிக்கு, அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அத்தகைய தவறாளர்மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்புக்குப் பயன்கொடுப்பதற்காக, அவருக்குத் தோதானதெனத் தோற்றக்கூடியவாறான ஏதேனும் இடத்தில் அத்தகைய தவறாளரைக் கட்டுக்காப்பில் வைத்திருப்பதற்கு அதிகாரம் உடையவராயிருத்தலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றவரான எவரேனும் தவறாளர்மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்பபை வலுவுக்கிடுதலானது இலங்கையின் சட்டங்களினால் ஆளப்படுதல் வேண்டும்.

(3) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எப்படியிருப்பினும், அமைச்சர் உடன்படிக்கையில் வேறுவகையாகக் குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி, (1) ஆம் உட்பிரிவின்கீழ் இலங்கைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட எவரேனும் தவறாளர்மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பின் சட்டத்தன்மையினாலும் கால எல்லை பணிக்கப்பட்டவாதல் வேண்டும்.

(4) ஓராம் உட்பிரிவின்கீழ் இடமாற்றம் செய்யப்பட்ட எவரேனும் தவறாளர்மீது விதிக்கப்பட்ட மறியற்றண்டனையின் சட்டத் தன்மையும் கால எல்லையும் இலங்கையின் ஏதேனும் சட்டத்துடன் ஒத்திசைவற்றதாக இருக்கின்றவிடத்து, இலங்கைச் சட்டங்களுடன் ஒத்திசைவுள்ளதாக இருக்கும்விதமாக அத்தண்டனைத் தீர்ப்பை இசைவாக்குவதற்கு இலங்கையிலுள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்கமுள்ள நீதிமன்றமொன்றுக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும். ஆயின், எவ்வாறாயினும், இலங்கையின் தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் உள்ள அத்தகைய நீதிமன்றத்தினால் இசைவாக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்பானது சாத்தியமாகக்கூடிய அளவுக்கு அத்தவறாளர் குறித்துரைக்கப்பட்ட எந்த நாட்டிலிருந்து இலங்கைக்கு இடமாற்றஞ் செய்யப்பட்டாரோ அந்த நாட்டில் அத்தகைய தவறாளர் மீது விதிக்கப்பட்ட தண்டனைத் தீர்ப்புக்கு நேரொத்ததாக இருத்தல் வேண்டும்.

9. ஆறும் பிரிவின்கீழ் அமைச்சரினால் வழங்கப்பட்ட ஆணைப்பத்திர மொன்றின் பயனாவது— அமைச்சரினால் வழங்கப்பட்ட ஏதேனும் ஆணைப் பத்திரத்தின் பயன்.

(அ) குறித்துரைக்கப்பட்ட எந்த நாட்டிற்குத் தவறாளர் இடமாற்றஞ் செய்யப்படுகின்றாரோ அந்த நாட்டின் நேரான அதிகாரியினால் தவறாளரின் அத்தகைய கட்டுக்காப்பை எடுப்பதற்கு முறையாக அதிகாரமளிக்கப்பட்ட ஆளொருவரின் கட்டுக்காப்புக்குள் இலங்கைக்குள்ளாக ஏதேனும் இடத்திற்கு அவரைக் கொண்டுசென்று இலங்கையிலிருந்து வெளியேறும் இடத்தில் அவரை ஒப்படைப் பதற்கும்; அத்துடன்

(ஆ) எவரினுடைய கட்டுக்காப்பிற்குள் தவறாளர் ஒப்படைக்கப்பட்டாரோ அவரினால் அத்தவறாளர் இலங்கைக்கு வெளியேயுள்ள ஏதேனும் இடத்திற்கு அகற்றிச் செல்லப்படுவதற்கும் அதிகாரம் அளிப்பதற்கானதாகும்.

10. (1) இச்சட்டத்தின் 8 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் கட்டுக்காப்பிற்குப் பாரப்படுத்தப்பட்டவரான எவரேனும் தவறாளர் அத்தகைய கட்டுக்காப்பிலிருந்து தப்பிச்சென்றால், ஏதேனும் இடத்தில் புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் அவ்விடத்தில் வழங்கப்பட்ட அவரைக் கைது செய்வதற்கான ஆணைப்பத்திரத்தின்கீழ் கட்டுக்காப்பிலிருந்து தப்பிச் செல்லும் ஆளொருவரைக் கைதுசெய்வதைப்போன்று அதேமுறையில் இலங்கையிலுள்ள எந்த இடத்திலும் அவர் கைதுசெய்யப்படலாம். கட்டுக்காப்பிலுள்ள தவறாளி ஒருவரை இலங்கையிலுள்ள வேறு ஏதேனும் இடத்திற்கு அகற்றிச் செல்லல்.

(2) இச்சட்டத்தின் 8 ஆம் அல்லது 9 ஆம் பிரிவின்கீழ் கட்டுக்காப்பில் இருக்கின்ற எவரேனும் தவறாளர் கட்டுக்காப்பில் அவர் வைத்திருக்கப்படும் இடத்தில் இருந்து இலங்கையில் உள்ள வேறு ஏதேனும் இடத்திற்கு அகற்றிச் செல்லப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்பட்டவிடத்து, அவர் இடமாற்றஞ் செய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்பட்ட இடத்தை அடையும்வரை அவர் கட்டுக்காப்பில் தொடர்ந்து இருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும்.

11. (54 ஆம் அத்தியாயமான) மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் இலங்கைக்கு அல்லது இலங்கையிலிருந்து இடமாற்றம் செய்யப்பட்ட ஒவ்வொரு தவறாளர் தொடர்பிலும் ஏற்ற மாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும். மறியற்சாலைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்புடைமை.

12. (1) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் பிரகாரம் இலங்கைக்கு இடமாற்றப்பட்ட ஒரு தவறாளர், அவர் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்ட குறித்துரைக்கப்பட்ட நாட்டில் வலுவிலுள்ள தண்டனைத் தீர்ப்பின் தணிப்புத் தொடர்பான சட்டத்துக்கிணங்க, அவர் இடமாற்றப்பட்ட நிகழ்வின்று அவர் உரித்துடையவராக வந்திருக்கக்கூடியதும் அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டில் அவர்மீது விதிக்கப்பட்டதுமான மறியற்றண்டனைத் தீர்ப்பின் ஏதேனும் தணிப்புக்கு அமைந்தவராதல் வேண்டும். தணிப்பும் மன்னிப்பு வழங்குவதற்கான சனாதிபதியின் தத்துவமும்.

(2) இச்சட்டத்திலுள்ள எதுவும், அரசியலமைப்பின் 34 ஆம் உறுப்புரையின் கீழ் எவரேனும் தவறாளருக்கு தண்டனைத் தீர்ப்பின் மன்னிப்பை அல்லது தணிப்பை வழங்குவதற்கான சனாதிபதியின் தத்துவத்தை வரையறை செய்வதாக அல்லது எடுத்துவிடுவதாக அவ்வாறு பொருள் கொள்ளப்படுதலாகாது.

இலங்கைப் பிரசையாக வுள்ள ஒரு தவறாளர் மீது விதிக்கப் பட்ட மறியற் றண்டனைத் தீர்ப்பொன் றுக்கு மேன் முறையீடு அல்லது மீளாய்வு எது வும் இல்லை.

13. ஓர் இலங்கைப் பிரசையாகவுள்ள எவரேனும் தவறாளர் மீது ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் விதிக்கப்பட்ட மறியற்றண்டனைத் தீர்ப்பு, அத்தகைய தண்டனைத் தீர்ப்பை விதிக்கின்ற கட்டளை முடிவு அல்லது தீர்ப்பு இலங்கையிலுள்ள தகுதிவாய்ந்த நியாயாதிக்கம் உள்ள நீதிமன்றம் ஒன்றினால் விதிக்கப்பட்ட ஒரு கட்டளை, முடிபு, அல்லது தீர்ப்பு எனக் கருதப்படும் நிகழ்வைப் பொருட்படுத்தலும் இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தில் ஏதேனும் மேன்முறையீட்டிற்கு அல்லது மீளாய்வுக்கு அமைந்ததாதலாகாது.

ஒழுங்கு விதிகள்.

14. (1) விதித்துரைக்கப்படவேண்டுமென இச்சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட அல்லது தேவைப்படுத்தப்பட்ட எல்லாக் கருமங்கள் தொடர்பிலும் அல்லது எக்கருமங்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட வேண்டுமென அதிகாரமளிக்கப்பட்டதோ அல்லது தேவைப்படுத்தப்பட்டதோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சரானவர் ஒழுங்கு விதிகளை ஆக்கலாம்.

(2) அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்கு விதியும் கசெத்தில் வெளியிடப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் திகதியில் அல்லது ஒழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய திகதியில் நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஒராம் உட்பிரிவின் கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒவ்வோர் ஒழுங்குவிதியும், கசெற்றில் அதன் வெளியீட்டிற்குப் பின்னர் வசதியான அளவு விரைவாக அங்கீகாரத்திற்கெனப் பாராளுமன்றத்தின் முன்னர் கொண்டு வரப்படுதல் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாத ஏதேனும் அத்தகைய ஒழுங்குவிதி, அதன்கீழ் முன்னர் செய்யப்பட்ட எதற்கும் பங்கமின்றி அங்கீகாரம் மறுக்கப்பட்ட திகதியிலிருந்து இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்படுதல் வேண்டும். ஏதேனும் ஒழுங்குவிதி எத்திகதியில் அவ்வாறு இல்லாதொழிக்கப்பட்டதெனக் கருதப்பட்டதோ அத்திகதி பற்றிய அறிவிப்பு கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

பொருள் கோடல்.

15. இச்சட்டத்தின் சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"உடன்படிக்கை" என்பது, இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ இலங்கைக்கும் வேறு ஏதேனும் நாட்டிற்குமிடையே, இரு நாடுகளிடையே தவறாளர்களின் பரஸ்பர இடமாற்றம் தொடர்பாகச் செய்து கொள்ளப்பட்ட ஏதேனும் உடன்படிக்கை எனப் பொருள்படும் ;

குறித்துரைக்கப்பட்ட ஒரு நாடு தொடர்பாக "தோதான அதிகாரி" என்பது, ஏதேனும் ஒரு குறித்துரைக்கப்பட்ட நாட்டிற்கும், அந்நாட்டிலிருந்தும் தவறாளரின் இடமாற்றத்தைத் திருவழிப்பதற்குப் பொறுப்பாயுள்ள அதிகாரியென உடன்படிக்கையில் குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய குறித்துரைக்கப்பட்ட நாட்டிலுள்ள ஓர் ஆள் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும் ;

"மறியற்சாலைகள் ஆணையாளர்" என்பது, (54 ஆம் அத்தியாயமான) மறியற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் நியமிக்கப்பட்ட மறியற்சாலைகள், நன்னடத்தைப் பாதுகாவற் சேவைகள் ஆணையாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் எனப் பொருள்படும்;

"தவறாளர்" என்பது, ஏதேனும் குறித்துரைக்கப்பட்ட நாட்டில் இச் சட்டம் தொடங்குவதற்கு முன்னரோ அல்லது பின்னரோ புரியப்பட்ட ஒரு தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவரும், ஒன்றில் இலங்கையிலுள்ள ஏதேனும் நீதிமன்றத்தினால் அல்லது நீதி நிருவாகத் தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கு அத்தகைய கட்டளைகளை ஆக்குவதற்குத் தத்துவமளிக்கப்பட்ட ஒரு நீதிமன்றத்தால் அல்லது வேறு நிறுவனத்தினால் ஆக்கப்பட்ட ஒரு கட்டளையின் பயனைக்கொண்டு மறியற்றண்டனைத் தீர்ப்பொன்றை அப்போதைக்கு அனுபவிக்கின்றவருமான ஓர் ஆள் எனப் பொருள்படும்.

16. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாட்டு) ரூபா 1,267 ; (வெளிநாட்டு) ரூபா 1,349 ; [illegible] திசெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்குமுன் [illegible] அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டு [illegible], 353, [illegible] மாவத்தை, கொழும்பு 7 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.